## 10th Social Science Lesson 14 Questions in Tamil - புவியியல்

### 3] வேளாண்மை கூறுகள்

1) மண் கீழ்க்கண்டவற்றுள் எதனை உள்ளடக்கியது?
a) கனிமங்களின் கூட்டுப் பொருட்கள்
b) மக்கிய தாவரங்கள்
c) விலங்கினப் பொருட்கள்
d) இவை அனைத்தும்

2) மண்துகள்கள் எத்தனை வகைகளாகப் பிரிக்கப்படுகிறது?
a) மூன்று
b) இரண்டு
c) நான்கு
d) இவை அனைத்தும்

3) இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
a) 1959
b) 1956
c) 1953
d) 1951

4) இந்தியாவில் குறைந்த அளவு காணப்படும் மண்வகை எது?
a) சரளை மண்
b) கரி மண் மற்றும் சதுப்பு மண்
c) உப்பு மற்றும் கார மண்
d) வறண்ட பாலை மண்

5) தவறாக பொருந்தியுள்ள இணையைக் கண்டறிக.
a) கரிசல் மண் – 29.69%
b) செம்மண் – 28%
c) வண்டல் மண் – 25.16%
d) காடு மற்றும் மலை மண் – 7.94%

6) காதர் மற்றும் பாங்கர் எந்த மண்ணின் பிரிவுகள் ஆகும்?
a) சரளை மண்
b) சதுப்பு மண்
c) உப்பு மற்றும் கார மண்
d) வண்டல் மண்

7) கரிசல் மண்ணின் கருப்பு நிறத்திற்கு காரணம்?
a) டைட்டானியம்
b) இரும்பு தாது
c) a) மற்றும் b)
d) மெக்னீசியம்

8) ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையும் உடைய மண் எது?
a) செம்மண்
b) வண்டல் மண்
c) கரிசல் மண்
d) சரளை மண்

9) பழமையான படிக பாறைகளான கிரானைட்,நைஸ் போன்ற பாறைகள், சிதைவடைவதால் உருவாகும் மண் வகை எது?
a) செம்மண்
b) வண்டல் மண்
c) கரிசல் மண்
d) சரளை மண்

10) தென் மாநிலங்களான கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா போன்றவற்றில் காணப்படும் மண் வகை?
a) செம்மண்
b) வண்டல் மண்
c) கரிசல் மண்
d) சரளை மண்

11) கீழ்க்கண்ட எந்த காரணத்தால் சரளை மண் உருவாகிறது?
a) கிரானைட்,நைஸ் பாறைகளின் சிதைவு
b) பசால்ட் பாறைகளின் சிதைவு
c) பௌதீக சிதைவு
d) மண்சுவரல்

12) காபி, இரப்பர், முந்திரி மற்றும் மரவள்ளிக் கிழங்கு அதிகம் விளையும் மண் வகை எது?
a) செம்மண்
b) வண்டல் மண்
c) கரிசல் மண்
d) சரளை மண்

13) அதிக அளவிலான உப்பு, அமிலத்தன்மை, பாஸ்பேட், பல்வேறு அளவுகளில் உள்ள கால்சியம் கார்பனேட் கொண்ட மண் எது?

a) செம்மண்
b) காடு மற்றும் மலை மண்
c) கரிசல் மண்
d) வறண்ட மண்

14) உப்பு மற்றும் கார மண் உருவாக காரணம்?
a) நுண்புழை நுழைவு
b) மண் சுவரல்
c) பௌதீக சிதைவு
d) a) மற்றும் b)

15) உயிரினப் பொருட்கள் 10–40 சதவீதம் வரைக் காணப்படும் மண் எது?
a) களிமண் மற்றும் சதுப்பு நிலம்
b) காடு மற்றும் மலை மண்
c) கரிசல் மண்
d) வறண்ட மண்

16) இந்தியாவில் 147 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பு மண் அரிப்பால் பாதிப்படைந்துள்ளதை அறிவித்த இந்திய நிறுவனம் எது?
a) இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம்
b) இந்திய அணுசக்தி கழகம்
c) இந்திய மண் ஆராய்ச்சி நிறுவனம்
d) இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்

17) மேம்பட்ட பயிர் சாகுபடி கீழ்க்கண்டவற்றுள் எம்முறைகளை உள்ளடக்கியது?
a) சம உயரம் உழுதல்
b) பயிர் சுழற்சி முறை
c) கரைகள் கட்டுதல்
d) இவை அனைத்தும்

18) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றை தேர்ந்தெடு.
a) 2014 ஆம் ஆண்டின் படி இந்தியாவில் சுமார் 15.8 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் கால்வாய் பாசன வசதியைப் பெற்றுள்ளன
b) கால்வாய் பாசனத்தில் 40 சதவீதம் வட இந்திய பெரும் சமவெளிகளில் காணப்படுகின்றன.
c) மேலும் வட மற்றும் மத்திய இந்தியாவில், ஆந்திரப்பிரதேசம், சத்தீஸ்கர், ஒடிசா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலும் கால்வாய் பாசனம் காணப்படுகிறது.
d) இவை அனைத்தும்

19) இந்தியாவில் மொத்த பாசன பரப்பளவில் எத்தனை சதவீதம் கிணற்று பாசனத்தின் கீழ் உள்ளது?
a) 54%
b) 62%
c) 72%
d) 46%

20) நிலத்தடி நீர் போதுமான அளவிற்கு இருக்கக் கூடிய பகுதிகளில் காணப்படும் நீர்ப்பாசனம்?
a) திறந்தவெளிக் கிணறுகள்
b) ஆழ்துளைக் கிணறுகள்
c) ஏரி நீர்ப்பாசனம்
d) கால்வாய் பாசனம்

21) இந்தியாவின் மிகப் பழமையான பாசன முறை எது?
a) கால்வாய் பாசனம்
b) ஏரிப்பாசனம்
c) கிணற்று நீர் பாசனம்
d) இவை அனைத்தும்

22) 2013 – 2014 ஆம் ஆண்டு காலத்தில் கிணற்று பாசனத்தின் கீழ் சதவிகித பரப்பளவில் முதல் 5 மாநிலங்களுள் வரும் மாநிலம்/மாநிலங்கள்?
a) மத்தியபிரதேசம்
b) உத்திரப்பிரதேசம்
c) a) மற்றும் b)
d) தமிழ் நாடு

23) எரிப்பாசனத்தில் முதன்மையாக உள்ள 5 மாநிலங்களில் பின்வருவனவற்றுள் எவை அடங்கும்?
a) மத்தியபிரதேசம்
b) தமிழ் நாடு
c) a) மற்றும் b)
d) உத்திரப்பிரதேசம்

24) தீபகற்ப இந்தியாவில் ஏரிப்பாசனம் சிறந்து விளங்க கீழ்க்கண்டவற்றுள் முக்கியமான காரணிகள் எவை?
a) கடினமானப் பாறைகளும் சமமற்ற நிலத்தோற்றம் உள்ள பகுதிகளில் கால்வாய்கள் கிணறுகள் தோண்டுவதற்கு கடினமாக உள்ளது.
b) நீர்புகாப் பாறைகளில் நீர் கசிவு ஏற்படாது.

c) மின் மிகை பகுதிகள் மற்றும் மென்பாறைகள் கொண்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிறது
d) a) மற்றும் b)

25) தாவர வேர்களின் சிறிய பகுதிகளுக்கு பாய்ச்சப்பட்டு பெரிய மரங்கள், தோட்டப் பயிர்கள் போன்றவைகள் வளர்க்கவும் பயன்படுத்தப்படும் நீர்ப்பாசன முறை எது?
a) சொட்டு நீர்ப்பாசனம்
b) தெளிப்பு முறை பாசனம்
c) மையச்சுழல் நீர்ப்பாசனம்
d) a) மற்றும் b)

26) கரும்பு மற்றும் சோளப்பயிர்களுக்கு ஏற்ற வகை பாசனம் எது?
a) சொட்டு நீர்ப்பாசனம்
b) தெளிப்பு முறை பாசனம்
c) மையச்சுழல் நீர்ப்பாசனம்
d) a) மற்றும் b)

27) நீர்ச்சக்கரம் என்று அழைக்கப்படும் நீர்ப்பாசன முறை எது?
a) சொட்டு நீர்ப்பாசனம்
b) தெளிப்பு முறை பாசனம்
c) மையச்சுழல் நீர்ப்பாசனம்
d) a) மற்றும் b)

28) பெரும்பாலான பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கம் எது?
a) குடிநீர் மற்றும் தொழிற்சாலைக்கு நீர் வழங்குதல்
b) வெள்ளத்தடுப்பு மற்றும் மீன்வள மேம்பாடு
c) நீர் வழிப் போக்குவரத்து
d) நீர் மின் சக்தி மற்றும் நீர்ப்பாசனம்

29) பிரதான் மந்திரி கிருஷி சிஞ்சாயி யோஜனாவின் முக்கிய நோக்கம்/கள் எது/எவை?
a) நன்னீர் பாசன திட்டம்
b) குறைந்த அளவு நீரில் அதிக மகசூல்
c) தண்ணீர் பயன்பாட்டை மேம்படுத்தல்
d) b) மற்றும் c)

30) ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, குஜராத், மகாராஷ்ட்ரா மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் எந்த திட்டத்தின் மூலம் 78 சதவீத நீர்ப்பாசன வசதியை பெற்றுள்ளன?
a) பிரதான் மந்திரி கிருஷி சிஞ்சாயி யோஜனா
b) நன்னீர் பாசன திட்டம்
c) நுண்நீர் பாசனத் திட்டம்
d) b) மற்றும் a)

31) பஞ்சாப், ஹரியானா, ஹிமாச்சல் பிரதேசம் போன்ற மாநிலங்கள் எந்த பல்நோக்கு திட்டத்தின் மூலம் பயனடைகின்றன?
a) பக்ரா நங்கல் திட்டம்
b) சம்பல் பள்ளத்தாக்குத் திட்டம்
c) ஹிராகுட் திட்டம்
d) இந்திரா காந்தி கால்வாய்த் திட்டம்

32) தெகிரி அணை திட்டத்தினால் பயனடையும் மாநிலம் எது?
a) உத்தரகாண்ட்
b) பஞ்சாப்
c) ஹரியானா
d) ஹிமாச்சல் பிரதேசம்

33) பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் எந்த பல்நோக்கு திட்டத்தின் மூலம் பயனடைகின்றன?
a) பக்ரா நங்கல் திட்டம்
b) இந்திரா காந்தி கால்வாய்த் திட்டம்
c) a) மற்றும் b)
d) சர்தார் சரோவர் திட்டம்

34) நாட்டின் மொத்த வருமானத்தில் வேளாண்மையின் பங்கு?
a) 25%
b) 35%
c) 28%
d) 40%

35) கீழ்க்கண்டவற்றுள் இந்திய வேளாண்மையை நிர்ணயிக்கும் அமைப்பு சார் காரணிகள் எவை?
a) மண்
b) நிலத்தோற்றம்
c) காலநிலை
d) வேளாண் நிலத்தின் அளவு

36) பெரும்பாலும் குடும்ப உறுப்பினர்களின் உதவியுடன் சாகுபடி செய்யப்படும் வேளாண் முறை எது?
a) இடப்பெயர்வு வேளாண்மை
b) வறண்ட நில வேளாண்மை
c) தன்னிறைவு வேளாண்மை
d) கலப்பு வேளாண்மை

37) பழங்குடி இன மக்களால் மேற்கொள்ளப்படும் வேளாண் முறை எது?
a) இடப்பெயர்வு வேளாண்மை
b) வறண்ட நில வேளாண்மை
c) தன்னிறைவு வேளாண்மை
d) கலப்பு வேளாண்மை

38) தவறான இணையை தேர்ந்தெடு
a) ஜூம் – அசாம்
b) பொன்னம் – கேரளா
c) பொடு – ஆந்திரப்பிரதேசம்
d) பீரா – ஒடிசா

39) பூச்சிக் கொல்லிகள்,களைக்கொல்லிகள் மற்றும் இரசாயன உரங்களை அதிகமாக பயன்படுத்தி அதிகபட்ச விளைச்சலை பெறும் நோக்கம் கொண்ட வேளாண் முறை எது?
a) இடப்பெயர்வு வேளாண்மை
b) தீவிர வேளாண்மை
c) தன்னிறைவு வேளாண்மை
d) கலப்பு வேளாண்மை

40) கீழ்க்கண்டவற்றுள் வறண்ட நில வேளாண்மையின் கூறுகள் எது/எவை?
a) பாசன வசதி உதவியுடன் பயிரிடப்படும் பயிர்களும் இவ்வேளாண்மையின் கீழ் பயிரிடப்படுகின்றன.
b) இத்தகைய சூழ்நிலையில் விளைச்சல் பொதுவாக குறைவாகவே இருக்கும்.
c) இது இராஜஸ்தான், குஜராத், மத்தியப்பிரதேசம் போன்ற வறண்ட பகுதிகளில் நடைபெறுகிறது.
d) இவை அனைத்தும்

41) விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வேளாண் முறை எது?
a) கூட்டு வேளாண்மை
b) நவீன வேளாண்மை
c) தன்னிறைவு வேளாண்மை
d) கலப்பு வேளாண்மை

42) மலைச்சரிவுகளில் மண் அரிப்பை தடுக்க உதவுவது எது?
a) பாறைகள்
b) கால்வாய்கள்
c) படிக்கட்டு முறை
d) பள்ளத்தாக்குகள்

43) ஜூன் முதல் செப்டம்பர் வரை உள்ள காலம் எந்த பருவத்திற்கு உரியது?
a) காரிப்
b) ராபி
c) சையத்
d) மேற்கண்ட எதுவுமில்லை

44) இந்தியாவின் சாகுபடியாகும் முக்கியப் பயிர்களை எத்தனை பிரிவுகளாக பிரிக்கலாம்?
a) நான்கு
b) ஐந்து
c) மூன்று
d) இரண்டு

45) இந்திய வேளாண்மை பெரும்பாலும் எவ்வகைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது?
a) உணவுப்பயிர்கள்
b) தோட்டக்கலைப்பயிர்கள்
c) தோட்டப்பயிர்கள்
d) வாணிபப்பயிர்கள்

46) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?
a) உலகளவில் நெல் உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது.
b) 240C சராசரி வெப்பநிலையும், 150 செ.மீ ஆண்டு மழையளவும் உள்ள பகுதிகளில் நெல் பயிரிடப்படுகிறது.
c) வளமான களிமண் அல்லது வண்டல் மண் நெல் சாகுபடிக்கு ஏற்றது.
d) இவை அனைத்தும்

47) இந்தியாவில் நெல் எத்தனை முறைகளில் பயிரிடப்படுகிறது?
a) நான்கு
b) ஐந்து
c) மூன்று
d) இரண்டு

48) கீழ்க்கண்டவற்றுள் அதிக விளைச்சல் தரும் நெல் ரகம் எது?
a) CR தான் 205
b) A.R. தான் 306
c) CRR 451
d) இவை அனைத்தும்

49) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?
a) நெல் பயிருக்கு அடுத்தாற் போல் இரண்டாவது முக்கிய உணவுப் பயிராக விளங்குவது கோதுமை ஆகும்.
b) நாட்டின் பயிர் சாகுபடி பரப்பில் 24 சதவீதமும், மொத்த உணவுப் பயிர் உற்பத்தியில் 54 சதவீத பங்கையும் கோதுமை வகிக்கிறது.
c) இப்பயிர் விதைக்கும் பருவத்தில் 10–15℃ வெப்பமும், முதிரும் பருவத்தில் 20–25℃ வெப்பநிலையும் தேவைப்படுகிறது.
d) இவை அனைத்தும்

50) கீழ்க்கண்டவற்றுள் ஆப்பிரிக்காவை பூர்வீகமாக கொண்ட பயிர் எது?
a) கோதுமை
b) சோளம்
c) திணை
d) இவை அனைத்தும்

51) கீழ்க்கண்டவற்றுள் கம்பு உற்பத்தி செய்யும் முதன்மை மாநிலம் எது?
a) இராஜஸ்தான்
b) உத்திரப்பிரதேசம்
c) ஹரியானா
d) குஜராத்

52) ஏழைகளின் முக்கிய உணவாக மட்டும் இல்லாமல் பீர் மற்றும் விஸ்கி தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுவது எது?
a) கோதுமை
b) சோளம்
c) திணை
d) பார்லி

53) பயிர்சுழற்சி பயிரிடல் முறையில் வழக்கமாக பயிரிடப்படும் பயிர் எது?
a) கோதுமை
b) சோளம்
c) திணை
d) பருப்பு வகைகள்

54) சர்க்கரை உற்பத்தியில் நம் நாடு எந்த இரு நாடுகளுக்கு அடுத்து படியாக மூன்றாவது இடத்தில் உள்ளது?
a) அமெரிக்கா மற்றும் சீனா
b) கியூபா மற்றும் பிரேசில்
c) அர்ஜென்டினா மற்றும் சீனா
d) சீனா மற்றும் ரஷ்யா

55) இந்தியாவில் கரும்பு உற்பத்தி செய்யும் முதன்மை மாநிலம் எது?
a) மகாராஷ்ட்ரா
b) கர்நாடகா
c) உத்திரப்பிரதேசம்
d) தமிழ்நாடு

56) மொத்த பருத்தி உற்பத்தியில் 79% பங்களிப்பை வழங்கும் மாநிலம்/மாநிலங்கள் எது/எவை?
a) குஜராத்
b) மகாராஷ்டிரா
c) ஆந்திரப்பிரதேசம்
d) இவை அனைத்தும்

57) கீழ்க்கண்டவற்றுள் சணல் பயிரிடும் மாநிலம் அல்லாதது எது?
a) பீகார்
b) அசாம்
c) மேகாலயா
d) நாகாலாந்து

58) வார்னிஷ், மருந்துப் பொருட்கள் வாசனைப்பொருட்கள் போன்றவை தயாரிக்கப்பயன்படுவது எது?
a) சோளம்
b) பார்லி
c) எண்ணெய் வித்துக்கள்
d) பருப்பு வகைகள்

59) குஜராத் மாநிலம் கீழ்க்கண்டவற்றுள் எதன் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது?
a) சோளம்
b) பார்லி
c) எண்ணெய் வித்துக்கள்
d) பருப்பு வகைகள்

60) ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பயிரிடப்படுபவை எவை?
a) உணவுப்பயிர்கள்
b) வாணிபப்பயிர்கள்
c) a) மற்றும் b)
d) தோட்டப்பயிர்கள்

61) தேயிலை குறித்த பின்வரும் கூற்றுகளுள் சரியானவற்றை தேர்ந்தெடு.

a) தேயிலை அயன மண்டல மற்றும் உபஅயன மண்டல காலநிலைகளில் வளரும் ஒரு பசுமையான தாவரமாகும்.
b) தேயிலை பயிரிட குறைந்த தொழிலாளர்களும், அதிகமான நிழலும், குறைந்த மழையளவும் தேவை.
c) வேர்களில் தண்ணீர் தேங் கி இருக்க வேண்டும்.
d) இவை அனைத்தும்

62) இந்தியாவில் தேயிலை உற்பத்தி செய்யும் முதன்மை மாநிலம் எது?
a) தமிழ்நாடு
b) கேரளா
c) மேற்கு வங்கம்
d) அசாம்

63) உலக காபி உற்பத்தியில் இந்தியா எத்தனையாவது இடத்தை வகிக்கிறது?
a) இரண்டாவது
b) ஐந்தாவது
c) ஏழாவது
d) பதினோராவது

64) கர்நாடக மாநிலம் காபி உற்பத்தியில் உலக அளவில் எத்தனை சதவீதத்தைக்கொண்டுள்ளது?
a) 2.5%
b) 3.5%
c) 7%
d) 1.5%

65) இரப்பர் பயிரிட ஏற்ற காலநிலை எது?
a) அயன மண்டல காலநிலை
b) உப அயன மண்டல காலநிலை
c) ஈரப்பத காலநிலை
d) வெப்ப ஈரப்பத அயன மண்டல காலநிலை

66) இரப்பர் உற்பத்தி குறித்த கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானவற்றை தேர்ந்தெடு.
a) வெப்பநிலை 20°C க்கும் அதிகம், மழைப்பொழிவு 300 செ.மீக்கு மேல்
b) பெரும்பாலான இரப்பர் தோட்டங்கள் சிறு நில உடைமையாளர்களிடம் உள்ளன.
c) கேரளா தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவுகள் இரப்பர் உற்பத்தியில் முக்கியமான பகுதிகளாகும்.
d) இவை அனைத்தும்

67) நறுமணப் பொருட்களை உற்பத்தி செய்யும் இந்தியாவின் முதன்மையான மாநிலம் எது?
a) தமிழ்நாடு
b) கேரளா
c) ஆந்திரா
d) கர்நாடகா

68) பழங்கள் மற்றும் காய்வகைகள் உற்பத்தியில் இந்தியா எத்தனையாவது இடம் வகிக்கிறது?
a) இரண்டாவது
b) மூன்றாவது
c) நான்காவது
d) முதலாவது

69) கீழ்க்கண்ட மாநிலங்களில் ஆப்பிள் எங்கு அதிகம் விளைகிறது?
a) இமாச்சல பிரதேசம்
b) பஞ்சாப்
c) உத்திரப்பிரதேசம்
d) மகாராஷ்டிரா

70) கால்நடைகள் குறித்த பின்வரும் கூற்றுகளுள் தவறான ஒன்றை தேர்ந்தெடு.
a) ஊட்டசத்து நிறைந்த உணவுகளை அளிப்பதன் மூலம் இவை உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்துகிறது.
b) வேளாண்மை பொய்க்கும் பொழுது வேலைவாய்ப்பையும், வருவாயையும் அளிக்கின்றன.
c) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கால்நடைகள் சுமார் 10சதவீதத்தையும், வேளாண் உற்பத்தியில் 50% சதவீதத்தையும் தன் பங்களிப்பாக அளிக்கின்றன.
d) நிலத்தை உழுவதற்கும், பயிர்களுக்கு உரம் அளிப்பவையாகவும் இவை விளங்குகின்றன.

71) 2012 ஆம் ஆண்டு எத்தனையாவது கால்நடை வளர்ப்பு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது?
a) 19 வது
b) 20 வது
c) 30 வது
d) 9 வது

72) அதிக அளவிலான கால்நடைகளை கொண்ட இந்திய மாநிலம் எது?
a) ஆந்திரா

b) கேரளா

c) மகாராஷ்டிரா

d) உத்திரப்பிரதேசம்

73) 2012 ஆம் ஆண்டின் படி இந்திய வேளாண்சார் கால் நடைகளின் எண்ணிக்கையில் அதிகளவில் காணப்படும் இனம்?

a) வெள்ளாடுகள்

b) எருமைகள்

c) மாடுகள்

d) செம்மறியாடுகள்

74) உலக அளவில் எந்த நாட்டுக்கு அடுத்தபடியாக இந்தியா மாடுகள் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது?

a) அமேரிக்கா

b) சீனா

c) பிரேசில்

d) கியூபா

75) ஏழை மக்களின் பசு என்றழைக்கப்படுவது எது?

a) எருமை

b) பன்றி

c) கழுதை

d) வெள்ளாடு

76) இந்தியாவில் பால் உற்பத்தியின் ஒரு முக்கிய ஆதாரமாக உள்ளவை?

a) எருமைகள்

b) பசுக்கள்

c) பருத்தி

d) வெள்ளாடு

77) இந்தியாவின் முதல் கால்நடை கணக்கெடுப்பு எப்போது நடத்தப்பட்டது?

a) 1900

b) 1919

c) 1909

d) 1859

78) தமிழ் நாட்டில் கால்நடை கணக்கெடுப்பு எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது?

a) தமிழ்நாடு அரசு மாநில அளவிலான கால்நடை கணக்கெடுப்பை கால்நடை வளர்ப்புத் துறை உதவியுடன் மேற்கொள்கிறது.

b) மாவட்ட அளவிலான கணக்கெடுப்பு மண்டல இணை இயக்குநர் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

c) இக்கணக்கெடுப்புகள் மத்திய அரசின் 1. வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம், கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, மீன்வளத் துறை போன்றவற்றின் வழிகாட்டுதலின் படி மேற்கொள்ளப்படுகிறது.

d) இவை அனைத்தும்

79) பால் உற்பத்தியில் முதன்மை மாநிலங்களாகத் திகழ்பவை எவை?

i) இராஜஸ்தான்

ii ) உத்தரப்பிரதேசம்

iii ) மத்தியப்பிரதேசம்

iv ) கேரளா

a) i, ii , iii

b) ii , iii மட்டும்

c) i, ii , iii , iv

d) iii , iv மட்டும்

80) இறைச்சி உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் இந்திய மாநிலம் எது?

a) உத்திரப்பிரதேசம்

b) மகாராஷ்ட்ரா

c) மேற்கு வங்காளம்

d) கேரளா

81) நம் நாட்டின் ரோம உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் மாநிலம் எது?

a) இராஜஸ்தான்

b) உத்தரப்பிரதேசம்

c) மத்தியப்பிரதேசம்

d) கேரளா

82) உலக மீன் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடு எது?

a) இந்தியா

b) ஜப்பான்

c) சீனா

d) ரஷ்யா

83) தீவுக்கூட்டங்களை சேர்க்காமல் இந்திய கடற்கரையின் நீளம்?

a) 6100

b) 7517

c) 7500

winmeen.com

d) 6517

84) இந்திய கடற்கரை மாநிலங்களில் எந்த மாநிலம் கடல்மீன் உற்பத்தியில் முதன்மையானதாக உள்ளது?

a) கேரளா

b) தமிழ்நாடு

c) குஜராத்

d) ஆந்திரா

85) இந்தியாவில் எந்த மாநிலம் உள்நாட்டு மீன் பிடித்தலில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

a) கேரளா

b) தமிழ்நாடு

c) குஜராத்

d) ஆந்திரா

86) இந்தியாவின் முதல் ஐந்து மீன் பிடி மாநிலங்களுள் அல்லாதது?

a) கோவா

b) தமிழ்நாடு

c) குஜராத்

d) ஆந்திரா

87) இந்தியாவில் எத்தனை சதவீத நில உடமையாளர்கள் குறு விவசாயிகளாக உள்ளனர்?

a) 59%

b) 60%

c) 67%

d) 75%

88) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

a) வளமற்ற மண் இந்திய மண் பல்லாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து வளம் கூட்டல் மற்றும் புதுப்பித்தல் செயல்பாடியின்றி வேளாண்மைக்கு உட்படுத்தபட்டிருப்பதால் மண்ணின் வளம் குன்றி அதன் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது.

b) நீர்ப்பாசன பற்றாக்குறை இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு வேளாண் நிலப்பகுதியே பாசன வசதியை பெற்றிருக்கின்றது.

c) a) மற்றும் b)

d) இவற்றில் எதுவுமில்லை

89) கீழ்க்கண்டவற்றுள் நீர்ப்பாசன விவசாயிகள் மேற்கொள்ளும் பிரச்சனைகள் எவை?

i ) மழை

ii ) மின்சாரம்

iii ) அதிக வெப்பம்

iv ) கடினமான நிலப்பரப்பு

v ) தொழிலாளர்

vi ) எரிபொருள்

a) i ), ii ), iii ), iv ), v ), vi )

b) ii ), iii ), iv )

c) iii ), iv ), v ), vi )

d) iv ), v ), vi )

90) விவசாயிகள் உள்ளூர் வியாபாரிகளிடமும், தரகர்களிடமும் விவசாயப் பொருட்களைக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யக்காரணம்?

a) தரமான உள்கட்டமைப்பு வசதிகள் இன்மை

b) மழை இன்மை

c) தொழிலாளர் இன்மை

d) தரமான உற்பத்தி இன்மை

91) கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்று எது?

a) விவசாயகள் அறுவடை முடிந்தவுடன் வேளாண் உற்பத்தி பொருட்களை சந்தையில் விற்கும் கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்

b) போக்குவரத்து வசதியின்மை இந்திய வேளாண்மையின் முக்கிய சவால்களில் ஒன்று மலிவான மற்றும் போதுமான போக்குவரத்து வசதியின்மையாகும்.

c) வேளாண்மை அதிக மூலதனம் தேவைப்படும் தொழில்களில் ஒன்றாகும்.

d) இவற்றில் எதுவுமில்லை

92) பொன் புரட்சி பின்வரும் எதனோடு தொடர்புடையது?

a) பழங்கள்

b) தேன்

c) தோட்டக்கலைப்பயிர்

d) இவை அனைத்தும்

93) இந்தியாவின் இரண்டாவது மற்றும் முக்கியமான பாசன முறை எது?

a) கால்வாய் பாசனம்

b) ஏரிப்பாசனம்

c) கிணற்று நீர் பாசனம்

d) இவை அனைத்தும்

94) கால்வாய் பாசனத்தை எத்தனை வகையாக பிரிக்கலாம்?

a) இரண்டு

b) மூன்று

c) நான்கு

d) ஐந்து

95) குழாய்க்கிணறு மூலம் பாசனம் பெறும் நிலத்தின் பரப்பளவு?

a) 46%

b) 24%

c) 16%

d) 14%

winmeen.com